தினமணி

**மண்ணை வளமாக்கும் மண்புழு உரம்**

First Published : 29 Sep 2011 02:08:42 AM IST



தருமபுரி: மண்புழுக்கள் உணவாக உண்டு, வெளியேற்றும் எச்சமே மண்புழு உரம். ஆடு, மாடு போன்ற கால்நடைகளின் சாணம், வயல்வெளிகளில் உள்ள களைகள், அனைத்து பண்ணைக் கழிவுகள், காடுகளில் இருந்து கிடைக்கும் இலை மற்றும் தழைகள், சந்தையில் இருந்து பெறப்படும் வேண்டாத சொத்தை காய்கறிகள், பழங்கள் மற்றும் இலைக் கழிவுகள், உணவு விடுதிகளில் இருந்து பெறப்படும் இலை, வீணாகும் உணவுப் பொருள்கள் உள்ளிட்டவற்றை மண் புழுக்களுக்கு உணவாகக் கொடுத்து தரமான மண்புழு உரத்தை பெற முடியும்.

உரக்கூடம் அமைத்தல்: மண்புழு உரக்கூடத்தை தேவைக்கும், வசதிக்கும் ஏற்ப அமைக்கலாம். நீள்வாக்காக கிழக்கு, மேற்காக நல்ல காற்றோட்ட வசதியுடன் உரக்கூடங்களை அமைக்க வேண்டும். மண்புழுவின் எதிரியான எறும்பைக் கட்டுப்படுத்த சிறிய நீர்வாய்க்கால் தொட்டியின் வெளிப்புற அடிப்பாகத்திலோ அல்லது தொட்டியின் சுவர் விளம்புகளின் மேற்புறத்திலோ அமைக்க வேண்டும்.

எலி, பாம்பு, ஓணான், தவளை, ஆந்தை போன்றவற்றில் இருந்து மண்புழுவை பாதுகாக்கும் வகையில் தொட்டிகளின் மேல் சிறுகண் வலைகள் அமைப்பது அவசியம்.

மண்புழுக்களுக்கு உணவு அளிக்கும்போது நன்கு மக்கிய உணவை தொட்டியின் மேல்விளிம்பில் இருந்து 2 அங்குலம் குறைவாக இருக்கும்படி நிரப்ப வேண்டும்.

தொட்டிக்குள் 40% ஈரப்பதம் இருக்கும் வகையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

மேல்மட்ட புழுக்களாக இருந்தால் புழு விடுவித்த 7 முதல் 14 நாள்கள் கழித்து ஒருநாள் விட்டு ஒருநாள் அல்லது 2 நாள்களுக்கு ஒருமுறை 2 அங்குலத்துக்கு மிகாமல் உணவுப்படுக்கையின் மேல் உள்ள குருணை வடிவிலான புழு எச்சங்களை மட்டும் தனியாக சேகரிக்க வேண்டும்.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட மண்புழு உரத்தை 3 மி.மீ. கண்கொண்ட சல்லடைகளில் சலித்து உரத்தை பாலித்தீன் காகிதம் ஒட்டப்பட்ட அடர்மிகு பாலி எத்திலின் பைகளில் அடைத்து இருட்டான அறையில் 40% ஈரப்பதத்தில் சூரியஒளி படாத வகையில் வைத்து பயன்படுத்தலாம்.

மண்புழு உர தயாரிப்புத் தொட்டியில் ஊற்றப்பட்ட உபரிநீர் கீழே திரவ உரமாக வெளிவரும். இதுவே "வெர்மிவாஷ்' எனப்படும். இதில் தழை, மணி, சாம்பல் மற்றும் நுண்ணூட்டச்சத்துக்கள் திரவ நிலையில் உள்ளதால் பயிர்கள் எளிதில் இச்சத்துக்களை உட்கிரகித்து செழிப்பாக வளரும்.

மண்புழு உரத்தின் பயன்கள்: மண்புழு உரத்தில் சுமார் 1.5% தழைச்சத்து, 0.5%மணிச்சத்து, 0.8% சாம்பல் சத்து, 12% அங்ககக் கரிமப் பொருள்கள் உள்ளன. ஒரு ஏக்கரில் மண்புழு உரத்தை பயன்படுத்தினால் மண்ணின் உயிர்தன்மை ஒவ்வொரு ஆண்டும் அதிகரிக்கும்.

உரத்தில் உள்ள அனைத்துச் சத்துக்களும் தாவரங்களுக்கு உடனே கிடைக்கிறது. இதன்மூலம் பயிரின் வேர் வளர்ச்சி மற்றும் பூக்கும் திறன் தூண்டப்பட்டு, மகசூல் 20 முதல் 30% வரை அதிகரிக்கிறது.

மண்புழு உரம் தயாரிக்கும் தொழில்நுட்பம் குறித்து மாவட்ட வேளாண் துணை இயக்குநர், உழவர் பயிற்சி நிலையம், வேளாண் இணை இயக்குநர் அலுவலக வளாகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஆகியவரை நேரில் அணுகி தெரிந்து கொள்ளலாம்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம்**

First Published : 28 Sep 2011 03:47:04 PM IST

ஈரோடு, செப். 27: பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை 83.97 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,599 கன அடி தண்ணீர் வந்தது. ஆற்றில் விநாடிக்கு 1,400 கன அடி, வாய்க்காலில் விநாடிக்கு 2,300 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 17.88 டிஎம்சி.

தினமலர்
உண்மையின் உரைகல்

**சீனா, பாகிஸ்தான் நாடுகளின் போட்டியால்இந்தியாவின் வெங்காய ஏற்றுமதி பாதிப்பு**

செப்டம்பர் 29,2011,00:40



சென்னை:சீனா மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் கடுமையான போட்டியால், இந்தியாவின் வெங்காய ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது.அண்டை நாடுகளின் போட்டி மட்டுமின்றி, மத்திய அரசின் நிலையற்ற ஏற்றுமதி கொள்கை, விலை உயர்வு ஆகியவற்றாலும் வெங்காய ஏற்றுமதி சரிவடைந்துள்ளதாக ஏற்றுதியாளர்கள் தெரிவித்துள்ளனர். இம்மாதம், 20ம் தேதி முதல் 27ம் தேதி வரையிலுமாக, நாட்டின் வெங்காய ஏற்றுமதி, 4,000 - 5,000 டன் என்ற அளவில் மிகவும் குறைவாக இருந்தது என, மும்பையைச் சேர்ந்த வேளாண் பொருள்கள் ஏற்றுமதி கூட்டமைப்பின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.இந்திய வெங்காயத்திற்கு சர்வதேச அளவில் நல்ல வரவேற்பு உள்ளது. குறிப்பாக, வளைகுடா நாடுகள், தூர கிழக்கு நாடுகளான சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேஷியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் தேவை அதிகளவில் உள்ளது. இருப்பினும், சீனா மற்றும் பாகிஸ்தானில் இருந்து ஏற்றுமதியாகும் வெங்காயத்தின் விலை மிகவும் குறைவாக இருப்பதால், இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு இது மிகவும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. வெங்காய உற்பத்தியில், சீனாவிற்கு அடுத்தபடியாக, இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.மத்திய அரசு, வெங்காய ஏற்றுமதிக்கான தடையை, கடந்த 20ம் தேதியன்று விலக்கிக் கொண்டது. இதுமட்டுமின்றி, வெங்காய ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச விலையை, டன் ஒன்றுக்கு 475 டாலராகவும் நிர்ணயம் செய்தது. அதே சமயம், சீன மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் வெங்காய ஏற்றுமதி விலை முறையே 300 மற்றும் 325 டாலராக உள்ளது. இதனால், இந்நாடுகளுடன், இந்திய ஏற்றுமதியாளர்கள் போட்டியிட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.இம்மாதம், 9ம் தேதி முதல் 20ம் தேதி வரையிலான காலத்தில், மத்திய அரசு, வெங்காய ஏற்றுமதிக்கு தடைவிதித்திருந்தது. இதனால், அதிகளவிலான சிங்கப்பூர் வர்த்தகர்கள், சீன ஏற்றுமதியாளர்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளனர். பொதுவாக, நம்நாட்டிலிருந்து மாதத்திற்கு

70 ஆயிரம் டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது.முன்பு, வளைகுடா நாடுகளில், வெள்ள பாதிப்பு ஏற்படும் போது, இந்திய வெங்காயம் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், தற்போது அந்த நிலை முற்றிலும் மாறி, பாகிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளப்படுகிறது என, வேளாண் பொருள்கள் ஏற்றுமதி கூட்டமைப்பின் உயரதிகாரி மேலும் தெரிவித்தார். "நபெட்' சந்தையிலிருந்து ஏற்றுமதியாகும் வெங்காயம், கடந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களை விட, நடப்பாண்டின் முதல் ஆறு மாதங்களில் மிகவும் குறைந்து போயுள்ளது.நடப்பு 2011ம் ஆண்டு, ஏப்ரல் 1ம் தேதி முதல் செப்படம்பர் 26ம் தேதி வரையிலான காலத்தில், 5.58 லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதியாகியுள்ளது. இது, கடந்த 2010ம் ஆண்டின் இதே காலத்தில், 9.34 லட்சம் டன்னாகவும், அதற்கு முந்தைய ஆண்டில், 11.21 லட்சம் டன்னாகவும் அதிகரித்து காணப்பட்டது. உள்நாட்டில், சில்லறை விற்பனையில், ஒரு கிலோ வெங்காயத்தின் விலை 25 ரூபாயாக உயர்ந்து காணப்பட்டது. இதன் விலையை கட்டுக்குள் கொண்டு வருவதற்காகவே, மத்திய அரசு கடந்த 9ம் தேதி வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஜப்பானிய காடை வளர்ப்பு பயிற்சி இளைஞர்களிடம் விண்ணப்பம் வரவேற்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2011,01:41 IST

கடலூர் : கடலூரில் ஜப்பானிய காடை வளர்ப்பு பயிற்சி பெற விரும்பும் இளைஞர்கள் விண்ணப்பிக்குமாறு கால்நடை மருத்துவ பல்கலைக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.இது குறித்து கால்நடை மருத்துவ பல்கலைக் கழகம் மற்றும் ஆராய்ச்சி மைய பேராசிரியர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழத்தின் தொலை நிலைக்கல்வி இயக்ககத்தின் சுய வேலை வாய்ப்புக்கான பயிற்சி ஜப்பானிய காடை வளர்ப்பு என்ற தலைப்பில் ஒரு மாத காலத்திற்கு செம்மண்டலம், வரதராஜன் நகரில் உள்ள மருத்துவ பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நடைபெறவுள்ளது.இதற்கு பயிற்சி கட்டணம் 1,000 ரூபாயும், தமிழில் எழுதப் படிக்க தெரிந்திருக்கவேண்டும். 2011ம் ஆண்டு செப்டம்பர் 1ம்தேதி அன்று 18 வயது நிறைவடைந்திருக்கவேண்டும்.பயிற்சியில் பங்குபெற விரும்புவோர் தங்கள் சொந்த செலவில் உணவு மற்றும் உறைவிட வசதியை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.மேலும் பயிற்சிக்கான விண்ணப்பம் இலவசமாக வரும் 13ம்தேதி வரை செம்மண்டலம், வரதராஜன் நகரில் உள்ள மருத்துவ பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் பெற்றுக் கொள்ளலாம். முதலில் வரும் 10 விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும் என செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**தென்னையில் இலை கருகல் நோய் தாக்கம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2011,00:52 IST

நாமக்கல்: ப.வேலூர் அருகே தென்னையில் இலை கருகல் நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளது. அதனால், அம்மரங்களின் மட்டைகள் தீயிட்டுக் கருகியதுபோல் காட்சியளிப்பதுடன், தேங்காய் உற்பத்தி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக, விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.ப.வேலூர் அதன் சுற்றுவட்டார கிராமங்களில், பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் தென்னை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தென்னையில் சாகுபடியை அதிகரிக்க, விவசாயிகள் பல்வேறு யுக்திகளை கையாண்டு வருகின்றனர்.எனினும், பூச்சித் தாக்குதல் உள்ளிட்டவற்றால் தென்னையில் உற்பத்தி பாதிக்கப்படுவது வழக்கம். ப.வேலூருக்கு செல்லும் வழியில் உள்ள பிள்ளாகளத்தூர் கிராமத்தில் உள்ள தென்னை மரங்களில் இலை கருகல் நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது.அந்நோய் தாக்கப்பட்ட மரங்களில், தென்னை மட்டைகளை தீயிட்டுக் கொளுத்தியதைப் போல் கருகிய நிலையில் காணப்படுகிறது. இந்நோய் தாக்கத்தால், தேங்காய் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது. அதனால், தென்னை விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.இதுகுறித்து அப்பகுதி விவசாயிகள் கூறியதாவது:தென்னையில், இலை கருகல் நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்நோய், காற்று மூலம் தென்னைகளுக்கு பரவும் தன்மை உடையது. நோய் தாக்கப்பட்ட மரங்களின் மட்டைகள் கருகும். தேங்காய் உற்பத்தியும் பாதிக்கும். நோய் தாக்கப்பட்ட மரங்களின் மட்டைகளை வெட்டி தீயிட்டுக் கொளுத்த வேண்டும் என, வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.அதன்படி, விவசாயிகள் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்கின்றனர். மற்ற பகுதிகளுக்கும் இந்நோய் தாக்காமல் இருப்பதற்கான நடவடிக்கையை, வேளாண் அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தென்னை சாகுபடி விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2011,00:43 IST

தேனி : தென்னை சாகுபடி செய்ய விவசாயிகள் அதிகளவு ஆர்வம் காட்டி வருகின்றனர்.தென்னையில் செம்பான் சிலந்தி பூச்சி தாக்குதல், கூன் வண்டு தாக்குதல், உட்பட பல்வேறு நோய் தாக்குதல் ஏற்பட்டு விளைச்சல் வீழ்ச்சி அடைந்தது. இதனால் தென்னையை அகற்றி விட்டு வேறு பயிர்களை சாகுபடி செய்ய விவசாயத்துறை மானிய உதவிகளையும் வழங்கியது.தேங்காய், இளநீர் விலையும், விற்பனையும் தற்போது அதிகரித்துள்ளது.

விவசாயத்துறையும், தோட்டக்கலைத்துறையும் தென்னை சாகுபடிக்கு ஏராளமான மானிய உதவிகளை வழங்குகின்றன. எனவே தேனி மாவட்ட விவசாயிகள் தற்போது தென்னை சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# இந்தோனேஷியாவிலிருந்து வரும்

## பாமாயில் மீதான சுங்க வரியை உயர்த்த மத்திய அரசு தயக்கம்

ராம் சேகல்
மும்பை

இந்தோனேஷியா மற்றும் மலேசியாவிலிருந்து இறக்குமதியாகும் பாமாயில் மீதான சுங்க வரியை அதிகரிக்கும் விஷயத்தில் உத்தரவாதம் தர இயலாது என மத்திய உணவுத் துறை அமைச்சர் கே.வி.தாமஸ் கூறியுள்ளார்.

இந்தோனேஷியா

உலகின் மிகப் பெரிய பாமாயில் ஏற்றுமதி நாடான இந்தோனேஷியாவிலிருந்து, கச்சா மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பாமாயிலை இந்தியா இறக்குமதி செய்கிறது. சராசரி நடைமுறை தேவைகள் மற்றும் பண்டிகை கால தேவைகளை கருத்தில் கொண்டு நம் நாடு அதிக அளவில் பாமாயில் இறக்குமதி செய்கிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன், இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் கச்சா பாமாயில் மீதான ஏற்றுமதி வரியை அதிகரித்தும், சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் மீதான ஏற்றுமதி வரியை குறைத்தும் (10 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாக) அண்மையில் அறிவிப்பு வெளியிட்டிருந்தது.
இதன் காரணமாக, இறக்குமதி செய்யப்படும் கச்சா பாமாயில் விலை அதிகரிக்கும் என்பதால், அதனை வாங்கி சுத்திகரிக்கும் ஆலைகளின் பாமாயில் விலை, இறக்கு மதி செய்யப்படும் சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் விலையை விட அதிகமாக இருக்கும். இதனால், உள்நாட்டில் கச்சா பாமாயிலை சுத்திகரிக்கும் நிறுவனங்களின் வர்த்தகம் பாதிக்கப்படும். எனவே, இந்நிறுவனங்களின் கூட்டமைப்பு, சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் மீதான இறக்குமதி வரியை உயர்த்த கோரி வருகின்றன.
இது குறித்து கருத்து தெரிவித்த அமைச்சர் கே.வி.தாமஸ், "பாமாயில் இறக்குமதி வரியை உயர்த்த எந்த உத்தரவாதமும் தர இயலாது" என்று தெரிவித்தார்.
இது குறித்த இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் மத்திய வருவாய் மற்றும் வர்த்தக அமைச்சங்களுக்கே உள்ளது என அவர் மேலும் கூறினார்.
இருப்பினும், இதற்காக அமைக்கப்பட்டுள்ள உயர் மட்ட அமைச்சர்கள் குழு, சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் மொத்த கொள்முதல் மீதான இறக்குமதி வரியை ஏற்கனவே நடைமுறையில் உள்ள படி 7.5 சதவீதமாக வைத்திருக்கலாம் என்றும், கச்சா பாமாயில் மீதான இறக்குமதிக்கு வரி விலக்கு அளிக்கலாம் என்றும் பரிந் துரை செய்துள்ளது.

ருச்சி சோயா

நம் நாட்டில், சமையல் எண்ணெய் உற்பத்தியில் முன்னணி நிறுவனங்களுள் ஒன்றாக திகழும் ருச்சி சோயா இண்டஸ்ட்ரீசின் தலைவர் தினேஷ் சஹாரா இது குறித்து கூறும்போது, "இறக்குமதி செய்யப்படும் சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் விலை, உள்நாட்டு பாமாயிலை விட லிட்டருக்கு ரூ.3 வரை குறைவாக இருக்கும்.

இதனால், உள்நாட்டு நிறுவனங்களின் வர்த்தகம் பாதிக்கப்படும். உள்நாட்டு உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டு, நீண்ட கால அடிப்படையில் இறக்கு மதியாளர்களின் கை ஓங்கும் நிலை ஏற்படலாம்" என்று தெரிவித்துள்ளார்.

## புதிய பருவத்தில்

## நாட்டின் சர்க்கரை உற்பத்தி 2.65 கோடி டன்னாக உயரும்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நம் நாட்டில், எதிர்வரும் புதிய பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) 2.65 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகும் என தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கூட்டமைப்பின் தலைவர் ஜெயந்திலால் பீ. பட்டேல் தெரிவித்தார். எனவே புதிய பருவத்தில் கட்டுப்பாடற்ற வகையில் 40 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டும் என அவர் மேலும் கூறினார்.
எதிர்வரும் பருவத்தில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி 2.65 கோடி டன்னாக அதிகரிக்கும் என்ற மதிப்பீட்டை இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கமும் ஆமோதித்துள்ளது. அதே சமயம் உணவுத் துறை அமைச்சர் கே.வி. தாமஸ் சர்க்கரை உற்பத்தி 2.46 கோடி டன் அளவிற்கே இருக்கும் என்பதை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.
சர்க்கரை உற்பத்தி அதிகரிப்பதால் உள்நாட்டில் சப்ளை அதிகரித்து விலை சரிவடையும். இதனால் சர்க்கரை ஆலைகளின் லாப வரம்பு பாதிப்புக்குள்ளாகும். எனவே கட்டுப்பாடற்ற ஏற்றுமதிக்கு வகை செய்வதுடன், மத்திய அரசு 20 லட்சம் டன் சர்க்கரையை உள்நாட்டு சந்தையிலிருந்து வாங்கிக் கொள்ள வேண்டும் என்றும் உற்பத்தியாளர்கள் சங்கம் எதிர்பார்க்கிறது.

## ‘ஐஸ் லேண்ட் பப்பி’ மலர்கள்



ஊட்டியில் தற்போது 2–வது சீசன் களை கட்டியுள்ளது. ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் நடவு செய்யப்பட்ட மலர் செடிகளில் பல்வேறு வண்ணங்களில் பூக்கள் மலர்ந்துள்ளன. இதில் ஆரஞ்சு நிறத்தில் மலர்ந்துள்ள ஐஸ் லேண்ட் பப்பி மலர்கள் சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்துள்ளது.



# வேளாண்மை செய்திகள்

## நாட்டுக் கோழிகளை தாக்கும் நோய்கள்-தடுப்பு முறைகள்



நாட்டுக் கோழிகள் அதிக நோய் எதிர்ப்பு திறன் கொண்டவை. இருப்பினும் நச்சுயிர் மற்றும் நுண்ணுயிர் நோய்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றன.

### நச்சுயிர் நோய்கள்

ராணிக்கட் நோய் என்று அழைக்கப்படும் இது ஒரு நச்சுயிரியால் ஏற்படும் தொற்று நோய் ஆகும். இந்த நோய் தீவனம், குடிநீர், காற்று மூலம் பரவும் தன்மை கொண்டது. இந்த நோய் கண்ட கோழிகள் வெள்ளையாகவும், மூச்சுத்திணறல், நடுக்கம், வாதம் மற்றும் தீவனம் உட்கொள்ளும் அளவு குறைந்தும் காணப்படும்.

நோய் பாதிக்கப்பட்ட கோழிகள் தலையை இரண்டு கால்களுக்கு இடையில் சொருகிக் கொள்ளும். இந்த நோய் பெரும்பாலும் வெள்ளைக் கழிசல் நோய் என்றே அழைக்கப்படுகிறது. இந்த நோய் காணப்பட்டால் அதிக எண்ணிக்கையில் கோழிகள் இறந்து விடும். இறந்த கோழிகளின் முன் இரைப்பையில் ரத்தப்புள்ளிகளும், குடலில் புரையோடிய புண்களும் காணப்படும்.

### சிகிச்சை முறை

இந்த நோய்க்கான எதிர்ப்பு சக்தி அளவை அதிகரிக்க தடுப்பூசி மருந்தை அளிக்க வேண்டும். மேலும் நோயுற்ற கோழிகளை தனியே வைத்து அதிக கவனத்துடன் பராமரிக்க வேண்டும். இதற்கு ஒரு கிராம் மஞ்சளை 5 லிட்டர் தண்ணீரில் கலந்து கோழிகளுக்கு கொடுத்தால் நோய் எதிர்ப்பு அதிகமாகும். சீரகம் 10 கிராம், மிளகு 5 கிராம் ஆகியவற்றை நடுத்து நன்கு இடித்து பவுடராக்கி இதனுடன் சின்ன சீரகம் 10 கிராம், கீழ நெல்லி 50 கிராம், வெங்காயம் 5 பல், மஞ்சள் தூள் 5 கிராம், பூண்டு 5 பல் ஆகியவற்றை கலந்து அரைத்து இந்த கலவையை தீவனம் அல்லது அரிசிக் கஞ்சியில் கலந்து கொடுக்க வேண்டும்.

### பண்ணை மேலாண்மை

மேலும் இந்த நோயை கிருமிநாசினி தெளித்தல் மற்றும் சிறந்த பண்ணை மேலாண்மை மூலம் கட்டுப் படுத்தலாம். வெள்ளை கழிசல் நோயை தடுக்க கால்நடை மருத்துவரின் அறிவுரைப்படி தடுப்பூசி அளிக்க வேண்டும். இந்த நோயை கட்டுப்படுத்த தமிழ்நாடு மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் வாய் வழியாக அளிக்கப்படும் தடுப்பூசி மருந்துகளை தயாரித்து உள்ளது.

இந்த தடுப்பூசியை அனைத்து வயது நாட்டுக் கோழிகளுக்கும் அளிக்கலாம். ஒவ்வொரு 3 மாதமும் இந்த தடுப்பூசியை அளிக்க வேண்டும். இந்த தடுப்பு ஊசி குண்டு மணி வடிவில் உருண்டைகளாக காணப்படும். நாட்டுக் கோழிகளுக்கு இரண்டு தடுப்பூசி உருண்டைகளை அளிக்க வேண்டும்.

### கோழி அம்மை

இந்த நோய் கோழிகளின் எல்லா பருவத்திலும் தாக்கக் கூடிய ஒரு நச்சுயிரி நோயாகும். தொண்டை, மூக்கு, தாடைச் சதை, அலகின் ஓரங்கள், வாய், கால்கள் ஆகிய இடங்களில் கொப்புளங்கள் தோன்றி பிறகு புண்ணாக மாறி உலர்ந்து உதிர்ந்து விடும்.

இந்த நோயை தடுக்க பூண்டு 10 பல், மஞ்சள் தூள் 10 கிராம், துளசி இலை 50 கிராம், கற்பூரம் 5 கிராம், சின்ன சீரகம் 20 கிராம் ஆகியவற்றை நன்கு அரைத்து விளக்கெண்ணெய் மற்றும் வேப்ப எண்ணெயைச் சம அளவில் எடுத்து சூடு காட்டி பாதிக்கப்பட்ட இடங்களில் பூச வேண்டும்.

### வாய்வழியாக

மிளகு 5 எண்ணிக்கை இடித்து பின்பு சின்ன சீரகம் 10 கிராம் பூண்டு 5 பல், மஞ்சள் 5 கிராம், வேப்பிலை 10 இலைகள், துளசி 10 இலைகள் கலந்து அரைத்து இந்த கலவையை தீவனம் அல்லது அரிசிக் குருணையில் கலந்து கொடுக்க வேண்டும். கால்நடை மருத்துவரின் அறிவுரைப் படி கோழி அம்மை தடுப்பூசி மருந்தை கொடுத்து இந்த நோயை முற்றிலும் தடுக்கலாம்.

**தகவல்:-எழில்வளவன், கதிரேசன், மணிவண்ணன், பாரதிதாசன், செந்தில்குமார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை.**

## மல்பெரி உற்பத்தியில் களை மேலாண்மை



பட்டுப்புழுவின் ஒரே உணவு மல்பெரி இலை. மல்பெரி செடி பயிரிடும் நிலப்பரப்பிலும், பட்டுப்புழு வளர்ச்சியிலும் இந்தியாவில் கர்நாடக மாநிலம் முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் 30 ஏக்கர் பரப்பளவில் இறவைப்பயிராக மல்பெரி பயிரிடப்படுகிறது. தமிழ்நாடு, ஏறக்குறைய 750 மெட்ரிக் டன் பட்டு நூல் உற்பத்தி செய்து நாட்டின் 4-வது மாநிலமாக திகழ்கிறது.

### மல்பெரி உற்பத்தி

மல்பெரி இலைகளின் உற்பத்தி செலவு, மொத்த கூடு உற்பத்தி செலவில் சுமார் 60 சதவீதம் ஆகும். மொத்த உற்பத்தி செலவில் 40 சதவீதம் மல்பெரிக்கான உரத்திற்கும், களை மேலாண்மைக்கும், உரமிடுவதற்கும் தேவைப்படுகிறது. பட்டுப்புழுவின் வளர்ச்சி, பட்டுக்கூட்டின் தரம் மல்பெரி இலையின் தரத்தை பொருத்தே அமைகிறது. ஊட்டச்சத்து மிக்க மல்பெரிகளை உற்பத்தி செய்வதற்கு உரமிடுதல், நீர்ப்பாய்ச்சுதல், களை மேலாண்மை ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் பட்டுப்புழுவின் வளர்ச்சியும், பட்டுக்கூடுகளின் விளைச்சலும் மல்பெரி இலைகளின் தரத்தையே சார்ந்து உள்ளன. ஒவ்வொரு முறையும் தண்டை வெட்டும்போது நிலத்தில் வளர்ந்திருக்கும் களைகளை அகற்ற வேண்டியது அவசியம்.

அருகம்புல், கோரை, பார்த்தீனியம், நாய் கடுகு, முள்ளுக்கீரை, வெட்டுக்காய்பூண்டு, அம்மான் பச்சரிசி, கோரை புல் போன்ற களைகள் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டுள்ள இடங்களில் காணப்பட்டாலும், அருகம்புல், கோரை, பார்த்தீனியம் போன்ற களைகளின் தாக்கமே அதிகமாக இருக்கும். அருகம்புல் பல பருவ களையாகும்.

இது எல்லாவகையான மண்ணிலும் வளரும் இயல்பு கொண்டது. இந்த களைகளினால் 32 சதவீதமும், கோரைக்கிழங்கால் 79 சதவீதமும் மல்பெரி உற்பத்தி பாதிக்கப்படுகிறது. மல்பெரிக்கு கிடைக்க வேண்டிய நீர், ஊட்டத்து ஆகியவற்றை களைகள் உறிஞ்சிவிடுவதால் வளர்ச்சி, இலையின் தரம் ஆகியவை பாதிக்கப்படுகிறது.

### கட்டுப்படுத்துவது எப்படி?

மல்பெரியின் வளர்ச்சிக்கு பாதிப்பு ஏற்படுத்தும் களைகளை கோடை உழவு, கைக்களை எடுத்தல், நிலப்போர்வை இடுதல், ஊடு பயிர் செய்தல், ரசாயன கொல்லி களை தெளித்தல் போன்ற முறைகளில் கட்டுப்படுத்தலாம். மல்பெரி நடவுக்கு முன் பருவமழை பொழிந்தவுடன் கோடைக்காலத்தில் நன்கு ஆழ உழவு செய்யதால் மண்ணில் உள்ள களைகளின் விதைகள் காய்ந்து விடும்.

களைகளை தீயிட்டு அழிக்கலாம். கோடை காலத்தில் உழவு செய்தால் மண்ணில் உள்ள பூச்சிகளின் கூட்டுப்புழுக்கள் அழிக்கப்படுகின்றன. ரசாயன மருந்துகளை தெளிக்கும் போது மல்பெரியின் மீது படாமல் தெளிக்க வேண்டும். கவாத்து செய்த பின் லிட்டருக்கு கிளைபோசேட் 10 மில்லியுடன் 10 கிராம் அம்மோனியம் சல்பேட்டையும், 2 மில்லி ஒட்டும் திரவம் சேர்த்து தெளிக்க வேண்டும்.

### ஊடுபயிர் செய்யலாம்

மல்பெரி கவாத்து செய்த பின்பு தட்டைப்பயறு ஊடுபயிராக எக்டேருக்கு 20 கிலோ என மல்பெரிக்கு இடையில் 30×15 செ.மீ. வரிசையில் பயிர் செய்து களைகளை கட்டுப்படுத்தலாம். பூ பூக்கும் நேரத்தில் 5 சதவீதம் நிலப்போர்வை இடுவதால் களைகளை கட்டுப்படுத்தலாம். ஊடுபயிராக தட்டைப்பயிறு விதைப்பதன் மூலம் அருகம்புல் களைகளை கட்டுப்படுத்துவதுடன், நிலத்தின் ஊட்டசத்துக்களை அதிகரிக்கலாம்.

**-தகவல்: சண்முகம், கிருஷ்ணன், முத்துசாமி, பட்டுப்புழுவியல் துறை, வேளாண் பல்கலைக்கழகம், கோவை.**

## மக்காச்சோளத்தில் அதிக மகசூலுக்கு நீர்வழி உரம்

அதிகரித்து வரும் மக்கள் பெருக்கத்திற்கேற்ப உணவு தானியங்களின் உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டிய நிலை உள்ளது. இந்த சூழலில் அருகி வரும் நீர் அளவின் பயன்பாட்டை குறைத்து அதிக மகசூலை பெற சொட்டுநீர் வழி உர பாசனம் கைகொடுக்கிறது.

நீர்வழி உரமிடுதல் என்பது நீர்மற்றும் உரச்சத்துக்களை பயிரின் வேர்ப்பகுதியில் நீரின் மூலம் செலுத்துவதாகும். இந்த முறையில் உரத்தை நீரில் கரைத்து பின் சொட்டுநீர் குழாயின் வழியாக செலுத்துவதால், உரச்சத்துக்கள் பயிரின் வேர்ப்பகுதியில் செலுத்தப்படுகிறது. நீரையும் உரத்தையும் மிகமிக குறைந்த அளவே செலுத்துவதால் பழைய முறையில் செய்யப்படும் நீர்ப்பாசனத்தில் போல் உரம் வீணாவது தடுக்கப்படுகிறது. சொட்டு நீர் உரமிடுதலில், குறைந்த அளவு நீரும், உரமும் அதிக முறை, அதாவது மூன்று நாட்களுக்கு ஒரு முறை பயிரின் தொடக்கம் முதல் அறுவடை வரை செலுத்தப்படுவதால் பயிரின் மகசூல் மூன்று மடங்கு அதிகரிப்பதாகவும் 30 சதவீதம் வரை உரத்தை சேமிக்கவும் முடிகிறது என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

### மக்காச் சோளம்

மக்காச் சோளத்தை பொறுத்தமட்டில் கால்நடை மற்றும் கோழிப்பண்ணைகளில் தீவனமாக பயன்படுத்தப்படுவதால், இதன் தேவை தற்போது மிகவும் அதிகரித்திருக்கிறது. எனவே, மக்காச் சோளம் பயிரிடும் பரப்பு வருங்காலங்களில் அதிகமாகலாம். இப்படி ஒரு சூழல் வரும் போது நீரையும், உரத்தையும் சிக்கனமாக பயன்படுத்துவதன் மூலமே குறைந்த செலவில் அதிக மகசூலை பெற முடியும். சொட்டு நீர் பாசனம் மற்றும் உரம் கலந்த நீர்ப்பாசன முறையில் மூன்று நாளைக்கு ஒரு முறை பயிர்களுக்கு இடும் போது, 25 சதவீதம் கூடுதல் மகசூல் பெறலாம். இத்துடன், பயிருக்கு தேவையான யூரியா, மோனோ, அம்மோனியம் பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரங்களை சொட்டு நீர் பாசனத்தின் வழியாக கொடுக்கலாம். சொட்டு நீர் பாசனத்தின் வழி உரமானது 3 நாளுக்கு ஒரு முறை விதைப்புக்கு பின் 12 ஆம் நாளிலிருந்து 71 நாள் வரை கொடுக்கலாம்.

### பயன்பாட்டு திறன்

மக்காச்சோளத்தில் 75 சதம் பரிந்துரைக்கப்பட்ட உரத்தை சொட்டுநீர் பாசனத்தின் வழியாக கொடுக்கும் போது தழைச்சத்தின் பயன்பாட்டு திறன் 57 சதமாகவும், மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்தின் பயன்பாட்டு திறன் 115 சதமாகவும் கிடைக்கிறது. ஆனால் பழைய வாய்க்கால் முறை நீர்ப்பாசனம் மற்றும் மண்ணின் மேல்பரப்பில் உரத்தை இடும் முறையால் தழைச்சத்தின் பயன்பாட்டு திறன் 40 சதமாகவும், மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்தின் பயன்பாட்டு திறன் 80 சதம் மட்டும் தான் கிடைக்கும். மக்காச்சோளத்தை பொறுத்த அளவில் பயிருக்கு தேவையான 100 சதம் நீரின் அளவை சொட்டு நீர் பாசனத்தின் வழியாக கொடுக்கும் போதும், 125 சதவீதம் பரிந்துரைக்கப்பட்ட உரத்தின் அளவை சொட்டுநீர் பாசனத்தின் வழியாக கொடுக்கும் போதும் அதிக மகசூலை பெற முடிகிறது. இதற்கு காரணம், சொட்டு நீர் பாசனம் செய்யும் போது மண்ணின் ஈரத்தன்மை மற்றும் ஊட்டச்சத்தின் அளவு என்பது பயிரின் வளர்ச்சி முதல் அறுவடைக்காலம் வரை சீராக பயிருக்கு கிடைத்துக் கொண்டிருப்பதே ஆகும். இருந்தாலும், 75 சதம் பயிருக்கு தேவையான நீர் மற்றும் 100 சதம் பரிந்துரைக்கப்பட்ட உரத்தின் அளவை சொட்டு நீர் பாசனம் மூலம் கொடுத்தாலே அதிக மகசூல் பெறலாம்.

**தகவல்:-ப.சங்கரலிங்கம் வேளாண்மை இணை இயக்குநர் மற்றும் கி.கருணிபொம்மு, வேளாண் உதவிஇயக்குநர் (தரக்கட்டுப்பாடு), மதுரை.**